RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-4 | இதழ்-33 | 02 பிப்ரவரி ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# பட்ஜெட் 2025:

## ★ கிசான் கடன் அட்டை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடனின் உச்ச வரம்பு ரூ.3 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்படுகிறது.

## ★ எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தன்னிறைவு பெற 6 ஆண்டு கால சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

## ★ பிஹாரில் தேசிய உணவு பதப்படுத்துதல் மையம் அமைக்கப்படும்.

## ★ ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு வரிச் சலுகை நீட்டிக்கப்படுகிறது.



புதுடெல்லி

அரசு விமானங்களே இல்லை ஆனாலும் 100 விமான நிலையங்கள் கட்டும் ஒன்றிய அரசு

காப்பீட்டுத் துறையில் அந்நிய முதலீட்டு வரம்பு 74 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாக உயர்வு காப்பீட்டுத்துறையை முடிவுக்கு கொண்டு வரும் நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.

ஒன்றிய பட்ஜெட்டை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்டார். ஒருமணி நேர பட்ஜெட் உரையில் அவர் தெரிவித்ததாவது,

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முடுக்கிவிடுவது, ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்வது, தனியார் தொழில்துறை முதலீட்டு வளர்ச்சி, குடும்பங்களின் எதிர்பார்ப்பை உறுதிப்படுத்துவது, வளர்ந்து வரும் நடுத்தர வர்க்கத்தினரின் சக்தி ஆகியவற்றில் மத்திய அரசு எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளளுர்..18

நாடாளுமன்ற மக்களவை காலை 11 மணிக்கு கூடியதும் எதிர்க்கட்சி எம்பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். அப்போது, அனைவரும் அமைதி காக்குமாறு சபாநாயகர் ஓம் பிர்லா வேண்டுகோள் விடுத்தார். எனினும், எதிர்க்கட்சி எம்பிக்கள் தொடர் அமளியில் ஈடுபட்டனர். அமளிக்கு இடையே நிர்மலா சீதாராமனை பட்ஜெட் உரை நிகழ்த்த சபாநாயகர் அழைத்தார். பட்ஜெட் அறிவிப்புகளை வெளியிடுவதற்கு முன் நிர்மலா சீதாராமன் கூறியது: “2025 26ம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டை சமர்ப்பிக்கிறேன். வளர்ச்சியை முடுக்கிவிடுவது, ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்வது, தனியார் தொழில்துறை முதலீட்டு வளர்ச்சி, குடும்பங்களின் எதிர்பார்ப்பை உறுதிப்படுத்துவது, வளர்ந்து வரும் நடுத்தர வர்க்கத்தினரின் சக்தி ஆகியவற்றில் மத்திய அரசு எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகளை இந்த பட்ஜெட் கருத்தில் கொண்டுள்ளது.

நமது பொருளாதாரம் அனைத்து முக்கிய பொருளாதாரங்களிலும் வேகமாக வளர்ந்து வருகிறது. கடந்த 10 ஆண்டு காலத்தில் நாம் அடைந்துள்ள வளர்ச்சி, நாம் நிகழ்த்தியுள்ள சாதனை, நாம் உருவாக்கியுள்ள கட்டமைப்பு சீர்திருத்தங்கள் ஆகியவை உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளன. இந்தியாவின் திறன் மற்றும் ஆற்றலின் மீதான நம்பிக்கை கடந்த 10 ஆண்டுகளில் மிக வேகமாக வளர்ந்துள்ளது. அனைத்து பிராந்தியங்களின் சீரான வளர்ச்சியைத் தூண்டும் வகையிலான அனைவருக்குமான வளர்ச்சியை உறுதிப்படுத்தக்கூடியதாக அடுத்த 5 ஆண்டுகள் இருக்கும் என்று நாங்கள் பார்க்கிறோம்.

இந்த நூற்றாண்டின் முதல் காலாண்டின் நிறைவு பகுதியில் நாம் இருக்கிறோம். புவி அரசியல் சூழல்களைப் பார்க்கும்போது, ஓரளவுக்கு மந்தமான பொருளாதார நிலையே இருக்கிறது. அதேநேரத்தில், கடந்த 10 ஆண்டு கால அரசின் சாதனைகள் வளர்ச்சி அடைந்த இந்தியா எனும் நமது கனவு நனவாகும் என்ற ஊக்கத்தை அளிக்கின்றன. நமது பொருளாதாரம் மிகவும் வேகமாக வளரும் பொருளாதாரங்களில் ஒன்றாக திகழ்கிறது. நமது பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டுகளில் சிறப்பாக இருந்தது. உலக அளவில் ஈர்ப்பை உருவாக்கி இருக்கிறது. நமது திறன்கள் மேம்பட்டிருக்கின்றன. நமது பிராந்தியத்தில் நாம் வளர்ந்திருக்கிறோம்.

பிரதமர் நரேந்திர மோடியின் உறுதியான வழிகாட்டுதலின் கீழ் அனைத்து மண்டலங்களுக்கான வளர்ச்சியை நாம் உறுதி செய்திருக்கிறோம். தேசம் என்பது மண் அல்ல; தேசம் என்பது மக்களால் ஆனது என்று தெலுங்கு கவிஞர் குருஜாதா அபாராவ் கூறி இருக்கிறார். இதை கருத்தில் கொண்டு வளர்ச்சி அடைந்த பாரதத்துக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. வறுமை ஒழிப்பு, நல்ல பள்ளிக் கல்வி, தரமான எளிதாக அணுகக்கூடிய சுகாதாரம், திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலை வாய்ப்புகள், பொருளாதார செயல்பாடுகள், நமது நாட்டை உலகின் உணவுக் களஞ்சியமாக மாற்றுவதற்கான வழிகள் ஆகியவற்றை அடைய 10 துறைகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

தலித்துகள், இளைஞர்கள், விவசாயிகள், பெண்கள் ஆகியோரை உள்ளடக்கிய வளர்ச்சி, நகர்ப்புறம் கிராமப்புறம் என உள்ளடக்கிய வளர்ச்சி, இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் வளர்ச்சி, சிறு குறு நடுத்தர தொழில்கள் மேம்பாட்டுக்கான திட்டங்கள் ஆகியவற்றை இந்த பட்ஜெட் உள்ளடக்கி உள்ளது” என்று நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

### மத்திய பட்ஜெட் 2025 முக்கிய அறிவிப்புகள் என்னென்ன?

மக்களவையில் மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே மக்களவையில் இன்று காலை 11.02 மணிக்கு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2025 26 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்தார். தொடர்ந்து 8வது முறையாக பட்ஜெட்டை தாக்கல் செய்த நிதியமைச்சர் தனது உரையில் வெளியிட்ட அறிவிப்புகளின் முக்கிய அம்சங்கள்...

வருமான வரி உச்ச வரம்பு ரூ.12 லட்சமாக உயர்வு: புதிய வருமான வரி விதிப்பு முறையின்படி வருமான வரிக்கான உச்ச வரம்பு ரூ.12 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்துடன், கூடுதலாக ரூ.75,000 கழிவும் கிடைக்கும். வருமான வரி விலக்கு உச்ச வரம்புக்கு மேலாக ஆண்டு வருமானம் ஈட்டுவோருக்கான வரிகள் விவரம்:

ரூ.4 லட்சம் வரை வரி இல்லை

ரூ.4 லட்சம் முதல் ரூ.8 லட்சம் வரை 5% வரி

ரூ.8 லட்சம் முதல் ரூ.12 லட்சம் வரை 10% வரி

ரூ.12 லட்சம் முதல் ரூ.16 லட்சம் வரை 15% வரி

ரூ.16 லட்சம் முதல் ரூ.20 லட்சம் வரை 20% வரி

ரூ.20 லட்சம் முதல் ரூ.24 லட்சம் வரை 25% வரி

ரூ.24 லட்சத்துக்கு மேல் 30% வரி

புதிய வருமான வரி மசோதா அடுத்த வாரம் தாக்கல் செய்யப்படும்.

வருமான வரி தாக்கல் செய்யப்படுதல் எளிதாக்கப்படும்.

மூத்த குடிமக்களுக்கு ரூ.50,000 வரை வரி பிடித்தம் கிடையாது.

தனிநபர் வருமான வரி சீர்திருத்தங்கள் நடுத்தர வர்க்கத்தினர் நலனை சார்ந்ததாக இருக்கும்.

வீட்டு வாடகைக்கான டிடிஎஸ் பிடித்தத்துக்கான வருடாந்திர வரம்பு ரூ.2.4 லட்சத்தில் இருந்து ரூ.6 லட்சமாக உயர்த்தப்படுகிறது.

வருமான வரிக் கணக்கை தாக்கல் செய்ய கால அவகாசம் 4 ஆண்டுகளாக நீட்டிக்கப்படுகிறது.

* புற்றுநோய், இன்னும் பிற அரிதான நோய்களுக்கான 36 வகையிலான உயிர் காக்கும் மருந்துகளுக்கு சுங்க வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அதே வேளையில் உயிர்காக்கும் 6 மருந்துகளுக்கு 5 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது.

லித்தியம் பேட்டரிகளுக்கு சுங்கவரியில் இருந்து முழுமையான விலக்கு.

பின்னலாடைகளுக்கு இறக்குமதி வரியில் சலுகை.

தோல் பொருட்கள் உற்பத்தியை ஊக்குவிக்க தோல் இறக்குமதிக்கு வரிச் சலுகை.

ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு வரிச் சலுகை நீட்டிக்கப்படுகிறது.

ஐஐடி, ஐஐஎஸ்சி உயர் கல்வி நிறுவனங்களில் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுக்காக 10 ஆயிரம் ஃபெலோஷிப்கள் வழங்கப்படும்.

வேளாண் துறைக்கான அறிவிப்புகள்: வேளாண் உற்பத்தியை அதிகரிக்க மாநில அரசுகளுடன் இணைந்து புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

பருப்பு உற்பத்தியை அதிகரிக்க சிறப்பான சாகுபடியை தரும் விதைகள் வழங்கும் திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தப்படும்.

அசாமில் யூரியா உற்பத்தி தொழிற்சாலை அமைக்கப்படும்.

பருத்தி உற்பத்தியை அதிகரிக்க திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

பிஹாரில் மக்கானா (தாமரை விதை) உற்பத்திக் கூடம் அமைக்கப்படும்

கிசான் கடன் அட்டை மூலம் 7.7 கோடி விவசாயிகள் குறுகிய கால கடன்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

கிசான் கடன் அட்டை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடனின் உச்ச வரம்பு ரூ.3 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்படுகிறது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தன்னிறைவு பெற 6 ஆண்டு கால சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

பிஹாரில் தேசிய உணவு பதப்படுத்துதல் மையம் அமைக்கப்படும்.

தொழில்முனைவோருக்கு சிறப்பு அறிவிப்பு: பட்டியல், பழங்குடி, பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த பெண்களுக்கு, புதிதாக தொழில்முனைவோருக்கு ரூ.2 கோடி வரை கடனுதவி வழங்கப்படும்.

காலணி மற்றும் தோல் துறையைப் பொருத்தவரையில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் 22 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

பொம்மை உற்பத்தித் துறையில் இந்தியாவை அந்தச் சந்தைக்கான சர்வதேச மையமாக்கும் வகையில் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

நாடு முழுவதும் ஐஐடி கல்வி நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். ஐஐடி பாட்னா விரிவுபடுத்தப்படும். இதன்மூலம் கூடுதல் மாணவர் சேர்க்கை உறுதி செய்யப்படும்.

நாடு முழுவதும் மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் 10,000 சேர்க்கை இடங்கள் உருவாக்கப்படும்.

ஜல்ஜீவன் திட்டம் 2028 வரை நீட்டிக்கப்படுகிறது.

காப்பீட்டுத் துறையில் அந்நிய முதலீட்டு வரம்பு 74 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.

அடுத்த 10 ஆண்டுகளில் மாநிலங்களில் புதிதாக 100 விமான நிலையங்கள் உருவாக்கப்படும்.

செயற்கை நுண்ணறிவை கல்வியில் ஊக்குவிக்கும் வகையில் ரூ.500 கோடி முதலீட்டில் ஒரு மையம் உருவாக்கப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் 50 ஆயிரம் ‘அடல் ஆய்வகங்கள்’ அரசுப் பள்ளிகளில் உருவாக்கப்படும்.

5 தேசிய திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்படும்.

காப்பீட்டுத் துறைகளுக்கான அந்நிய நேரடி முதலீட்டுக்கான வரம்பு 100 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.

‘இந்தியாவின் குணமாகுங்கள்’ ஹீல் இன் இந்தியா பிரச்சாரம் முன்னெடுக்கப்படும்.

பொருள் விநியோகம் செய்யும் டெலிவரி பணியில் உள்ள ஊழியர்களுக்கு மின்னணு அடையாள அட்டை வழங்கப்படும்.

அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் அடுத்த மூன்றாண்டுகளில் புற்றுநோயாளிகளைப் பராமரிக்கும் வகையில் ’டேகேர் கேன்சர் மையங்கள்’ அமைக்கப்படும். இவற்றில் 200 மையங்களில் 2025 26 ஆண்டிலேயே அமைக்கப்படும். இவ்வாறாக நிதியமைச்சர் பல்வேறு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னதாக எதிர்க்கட்சியினர் கடும் அமளியில் ஈடுபட்டனர். தொடர்ந்து அவர்கள் கூச்சலிட கடும் அமளிக்கு மத்தியில் நிதியமைச்சர் பட்ஜெட் உரையை வாசிக்கத் தொடங்கினார். சில நிமிடங்கள் தொடர்ந்து கூச்சலிட்ட எதிர்க்கட்சியினர் பின்னர் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தேசிய தொழுநோய் ஒழிப்புத்திட்டம் ஸ்பர்ஸ் தொழுநோய் விழிப்புணர்வு ஊர்தியை மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள.சங்கீதா கொடியசைத்து துவக்கி வைத்தார்.

## சோழவந்தானில் சார்பதிவாளர் அலுவலகம் புதிய கட்டிடம் ரூ.1.67 கோடி மதிப்பில் கட்டுவதற்கான பூமி பூஜை விழா



சோழவந்தான், பிப்.2

சோழவந்தானில் சார்பதி வாளர் அலுவலகம் புதிய கட்டிடம்1.67 கோடி மதிப்பில் கட்டுவதற்கான பூமி பூஜை விழா பழைய சார் பதிவாளர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சோழ வந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் எம்எல் ஏ கலந்துகொண்டு பணிகளை தொடங்கி வைத்தார். ஒன்றிய செயலாளர் பசும்பொன் மாறன், பேரூராட்சித் தலைவர் ஜெயராமன், பேரூர் செயலாளர் வழக்கறிஞர் சத்தியபிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் ஸ்ரீதர், பேரூர் துணை செயலாளர் ஸ்டாலின். மாவட்ட பிரதி நிதி பெரியசாமி, கவுன்சிலர் ஈஸ்வரிஸ்டாலின், சிபிஆர் சரவணன், வார்டு கவுன்சிலர்கள் மற்றும் சங்க கோட்டை சந்திரன் உட்பட திமுகவினர் கலந்து கொண்டனர்.

இதேபோல்சோழவந்தான் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, முள்ளிப்பள்ளம் அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மன்னாடி மங்கலம் ஆகிய பள்ளி புதிய கட்டிடத்திற்கு பூமி பூஜை நடந்தது. மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வக்கீல்முருகன், முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கேபிள் ராஜா, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரேகாவீரபாண்டி, மாவட்ட இளைஞரணி வெற்றிச்செல்வன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கம்பம் முகைதீன் ஆண்டவர் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கல்வி உபகரணங்கள்

கம்பம். பிப்.2



தேனி மாவட்டம் கம்பம் முகைதீன் ஆண்டவர் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு வாவேர் பள்ளி வாசல் ஜமாத் கமிட்டி மற்றும் முன்னாள் மாணவர்கள் சங்கம் (முன்னாள் காக்கா தோப்பு பள்ளி) இணைந்து பள்ளிக்கு 10 டேபிள்கள், 10 நாற்காலிகளை வாவேர் பள்ளி வாசல் ஜமாத் தலைவர் ஏ. ஜெய்னுலாப்தீன் தலைமையில் பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களிடம் வழங்கினர்.

நிகழ்வில் செயலாளர் லண்டன் நாகூர் மீரான், பொருளாளர் சபியுல்லா, துணைத்தலைவர்கள் ரபீக் ,அப்துல் சமது, துணைச் செயலாளர்கள் தீன், அப்துல் காதர், கமிட்டி உறுப்பினர்கள் ஜியாவுதீன், சித்திக் மற்றும் முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் தலைவர் அமானுல்லா செயலாளர் வின்னர் அலீம், செளபாஜ் அகமது, சுல்தான் இப்ராஹிம், யாசர் அராபத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் வணிகவிலாக கடைகள் 10 முதல் 20 வரை கட்டத் இடம் தேர்வு செய்ய தீர்மானம்



பட்டிவீரன்பட்டி, பிப்.2

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி பேரு ராட்சி அலுவலகத்தில் மாதாந்திர கவுன்சிலர் கூட்டம் நடை பெற்றது. பேரூராட்சி தலைவர் சியாமளா தலைமை வகித்தார். துணை தலைவர் கப்பனாதேவி அருண் குமார் முன்னிலை வைத்தார் செயல்அலுவலர் கோபிநாத் ஆவேற்றார். இக்கூட் டத்தில் நகர் மற்றும் ஊரக பகுதிகளில் மக்கள் சந்தை ஏற்படுத்தும் பொருட்டு 10 முதல் 20

கடைகள் வரை பேரு ராட்சியின் கட்டுப்பாட் டில் கீழ் 2500 சதுர அடி பரப்பளவுள்ள இடங் களை தேர்வு செய்தல், வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப புதிய குடிநீர் ஆதாரங் களை உருவாக்குதல் என்பது உள்ளிட்ட 9 தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

இதில் கவுன்சிலர்கள். அலுவலர்கள் கலந்து கொண்டனர். இள நிலை உதவியாளர் மோகனபிரியா நன்றி கூறினார்.

## வத்தலகுண்டு வராகி அம்மனின் வசந்த பஞ்சமி தை மாத வளர்பிறை பூஜை





வத்தலகுண்டு பிப்.2

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு காந்திநகர் வராகி அம்மனின் வசந்த பஞ்சமி தை மாத வளர்பிறை பூஜை வெகு விமர்சியாக நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் இந்த தை வளர்பிறையில் பக்தர்கள் அம்மனை தரிசிப்பது குறித்தேன் வராக அறக்கட்டளை தலைவர் பால்ராஜ் கூறும் போது பித்ரு தோஷம் சர்பதோசம் பிரம்மஹத்தி தோஷம் களஸ்திர தோஷம் ஆகியவை நீங்கும் என்பது ஐதீகம் வசந்த பஞ் சமி நாளில் இந்த அம்மனை வழிபடுவதால் சகல சவுரியங்களும் கிடைக்கும் ஐஸ்வர்யம் பெருகும் பஞ்சம் என்பது கிடையாது மகிழ்ச்சி அடைவார்கள் குடும்ப ஒற்றுமை போன்ற பல்வேறு நன்மைகள் விளங்கும் அதன்படி பக்தர்கள் தை மாத வளர்பிறை பஞ் சமி நாளில் அதிக அளவில் காணிக்கையாக வெள்ளைப் பூசணி எலுமிச்சை தேங்காய் நெய் தேங்காய் எண்ணெய் காய் சுற்றி விளக்கேற்றி வழிபாடு செய்து வருகின்றனர் இந்த அம்மனை வழிபடும்போது தனக்கு வேண்டிய வரத்தை கேட்கக்கூடாது என்பது ஐதீகம் அதனால் அம்மன் முன்பு நாம் நெற்கதியாக சரணடைந்து நின்றால் கேட்காமலேயே கேட்ட வரம் தருபவள் வராகி அம்பிகை வெற்றியின் அதிபதியாகவும் தோல்வி அவமானத்திலிருந்து காப்பாத்தி எதிரி பில்லி சூனியம் போன்ற துஷ்ட சக்தி லிருந்து காப்பவளாக இருப்பதால் பலரும் விரும்பி வழிபட்டு செல்கின்றனர் அனைத்து மதங்களிலும் வரக்கூடிய வளர்பிறை தேய்பிறை பஞ்சமி ஆடி செவ்வாய் வெள்ளி உள்ளிட்ட நாட்கள் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது இம்மாதத்தில் அம்மனுக்கு நடக்கும் விளையாட்டு நிகழ்ச்சியும் பிரசித்தி பெற்று வருகிறது அம்மனுக்கு காணிக்கையாக காய்கறி பச்சை காய்கறிகள் மரவள்ளிக்கிழங்கு சர்க்கரைவள்ளி கிழங்கு கோரைக்கிழங்கு அண்ணாச்சி செவ்வாழை உள்ளிட்ட பழங்களும் தேன் கலந்த மாதுளை கரும்புச்சாறு அபிஷேகச் செவ்வரளி மரிக்கொழுந்து உள்ளிட்ட மலர்கள் அம்மனுக்கு படைத்து அம்மனை வழிபட்டு வந்தால் தாங்கள் நினைத்ததை நடத்திக் கொடுப்பாள் எனக் கூறினார் இந்த தை வளர்பிறை நாளில் மதுரை திண்டுக்கல் பெரியகுளம் தேனி சின்னமனூர் அவிநாசி சென்னை போன்ற முக்கிய ஊர்களில் இருந்து பூஜையில் கலந்து கொண்டனர்



புதிய மதுரை மாநகராட்சியின் புதிய ஆணையாளர் சித்ரா விஜயன் பொறுப் பேற்றுக் கொண்டார்.



சேலம், கோட்டை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 150வது ஆண்டு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தலைமையில் நடைபெற்றது. உடன் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாநகராட்சி துணை மேயர் சாரதாதேவி, முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் மு.கபீர், அஸ்தம்பட்டி மண்டல குழுத்தலைவர் உமாராணி ஆகியோர் உள்ளனர்.

## தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள 30 குழந்தைகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்ச்சி



தென்காசி, பிப்.2

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் இயங்கும் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் சார்பில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலை யிலுள்ள குழந்தைகளுக்கு முதற்கட்டமாக நிறுவன கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், வழங்கினார்.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் இயங்கும் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் சார்பில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலை யிலுள்ள 30 குழந்தைகளுக்கு முதற்கட்டமாக நிறுவன கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து காசோலை வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது,

தென்காசி மாவட்டத்தில் இன்றைய தினம் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் சார்பில், பொரு ளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலை யிலுள்ள பெற்றோர் இருவரை யும் இழந்த 15 குழந்தை களுக்கும், ஊனமுற்ற 02 குழந்தைகளுக்கும், ஊனமுற்ற பெற்றோர்களின் 02 குழந்தைகளுக்கும், சிறைவாசிகளின் 02 குழந்தைளுக்கும், பெற்றோரால் கைவிடப்பட்டு பாதுகாவலர்களின் வசம் இருக்கும் 06 குழந்தைகள் ஆகியோர்களுக்கு தலா ரூ.10,000/மும், பெற்றோரில் ஒருவரை இழந்த 04 குழந்தைகளுக்கு தலா ரூ.5,000/மும் காசோ லையாக வழங்கப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்ச்சிக்கு நிதியுதவி வழங்கிய தென்காசி மாவட்ட சிறு சுரங்கங்கள் மற்றும் கல் உடைக்கும் தொழிலா ளர் சங்கம் மற்றும் குற்றாலம் ரோட்டரி கிளப் ஆகியோர் களுக்கு நன்றி கடிதத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் இதுபோன்று குழந்தை களுக்கு நிதியுதவி வழங்கிட முன்வரவேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் இயங்கும் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் மூலமும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட அளவிலான நிதி திரட்டும் குழு கூட்ட உறுப்பினர்கள், நிதி ஆதரவு திட்ட ஒப்புதல் குழு உறுப்பினர்கள், நிதி ஆதரவாளர்கள், தேர்ந் தெடுக்கப்பட்ட 30 குழந்தை கள் மற்றும் குழந்தைகளின் பெற்றோர்கள் / பாதுகா வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நள்ளிரவில் மக்களின் வரிப்பணம் 1 1/2 கோடியை வீணாக்கும் நெடுஞ்சாலைத் துறையினர்! கண்டுகொள்ளாத அதிகாரிகள்

பெரியகுளம், பிப்.2

தேனி மாவட்டம் பெரியகுளம் தண்டுபாளையம் காளியம்மன் கோவில் முதல் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை வரையிலான 900 மீட்டர் தூரம் அளவுள்ள சாலையில் பெரியகுளம் உட்கோட்ட தேசிய நெடுஞ்சாலை துறையின் கீழ் ரூபாய் ஒரு கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் புதிய தார்சாலை அமைக்க ஒப்பந்தம் விடப்பட்டு இன்று 31.1.2025 நள்ளிரவு தார்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.



நேற்று பெய்த மழையின் காரணமாக சாலை மிகவும் ஈரமாகவும், சேரும், சகதியுமாக காணப்பட்டு வரும் நிலையில் அவசரகதியில் பெரியகுளம் நகராட்சி நிர்வாகத்திடம் முறையாக அறிவிப்பு கூட வழங்காமல் தார் சாலை அமைக்கும் தீவிரமாக பணி நடைபெற்று வருகின்றது.

இதனால் பாதாள சாக்கடை, மற்றும் குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த நகர் பகுதி பொது மக்களுக்கு நகராட்சி நிர்வாகத்தின் கீழ் முறையாக இணைப்பு வழங்க முடியாத சூழல் உள்ளது .

மேலும் நள்ளிரவில் தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் அவசரகதியில் சாலையை தோண்டி நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் பாதாள சாக்கடை இணைப்பு ஏற்படுத்த உள்ளது. அதுவரை தார்சலை அமைக்கும் பணி சற்று நிறுத்தி வைக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர். நள்ளிரவில் அமைக்கப்பட்டு வரும் தார் சாலை தரமில்லாதவையாக காணப்படுகின்றது. நள்ளிரவில் மக்களின் வரிப்பணம் 11/2 கோடியை வீணடிக்கும் வகையில் இச்சாலை அமைக்கப்பட்டு வருகின்றது.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் இச்சாலையினை ஆய்வுசெய்து நகரின் மிக முக்கிய சாலையான பொதுமக்கள் அரசு மருத்துவ மனை, நீதிமன்றம், வட்டாட்சியர் அலுவலகம், கோவில், தபால் நிலையம் நகராட்சி, காவல் நிலையம், கால்நடை மருத்துவமனை, சிறைச்சாலை, உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலகங்களில் பல்வேறு தேவைகளுக்காக பொது மக்கள் அதிகம் சென்று வரக்கூடிய இச்சாலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, அவசர கால வாகனங்கள் சென்று வருவதற்கு ஏற்றார் போல் தரமான சாலையாக அமைத்து தர வேண்டுமாய் பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர். நள்ளிரவில் சாலை அமைப்பதால் முறைகேடுகள் அதிகம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த அச்சம் அடைந்துள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு நேற்று வருகை தந்ததையொட்டி மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் புத்தகம் கொடுத்து வரவேற்றார். பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம்,பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் பரமக்குடி சார் ஆட்சியர் அபிலாஷா கௌர் ஆகியோர் உடன் இருந்தனர்..






வேலூர் மாவட்டம், சத்துவச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வேலூர் மாவட்டத்தில் மாதிரி பள்ளிகளில் பயின்ற முன்னாள் மாணவர்களின் அனுபவங்கள் தொடர்பான கருத்தரங்கு மற்றும் கலந்துரையாடல் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி, மாவட்ட கல்வி அலுவலர்கள் மகாலிங்கம், ரமேஷ்குமார் மற்றும் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா நர்சரி பள்ளியில் அறிவியல் கண்காட்சி




சிவகங்கை, பிப்.2

பாபா நர்சரி பள்ளியில் அறிவியல் கண்காட்சி மிக சிறப்பாக நடைபெற்றது இதில் நூறுக்கும் மேற்பட்ட அறிவியல் சார்ந்த மாதிரிகள் வைக்கப்பட்டிருந்தன நீர் சுத்தகரிப்பு கருவி, வங்கி ஏடிஎம், ராக்கெட், நுரையீரல் பாரம்பரிய உணவுகள் ,மண்பாண்ட பொருட்கள், துரித உணவின் ஆபத்தை விளக்குதல் போன்றவற்றின் செயல்பாடுகளை மாணவர்கள் செய்திருந்தார்கள் குழந்தைகள் மிக சிறப்பாக பெற்றோர்களுக்கு விளக்கினார்கள் குழந்தைகளின் ஆர்வத்தை பெற்றோர்கள் மிக அருமையாக ஊக்கப்படுத்தினர். விழாவில் மாதிரிகள் தேர்ந்தெடுக்க நடுவராக ஸ்டேஷன் மாஸ்டர் தீபு சிறப்பாக அமைந்த முதல் மூன்று அறிவியல் சாதனங்களை தேர்ந்தெடுத்தார் குழந்தைகளின் திறமைகளையும் அவர்களின் ஈடுபாட்டையும் பாராட்டினார் நமது பள்ளியின் நிறுவனர் அம்மா ராஜேஸ்வரி கண்காட்சியை திறந்து வைத்தார் பள்ளியின் தாளாளர் கபிலன் முன்னிலை வகித்தார் பள்ளியின் நிர்வாகி மீனாட்சி பரிசினை வழங்கினார்கள் விழாவிற்கான ஏற்பாடுகளை பள்ளியின் பொறுப்பாசிரியர் பாண்டியம்மாள் மற்ற ஆசிரியர்களும் ஏற்பாடு செய்திருந்தார்கள்

## கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி 77வது ஆண்டு விழா கொண்டாட்டம்




கல்லல் பிப்02

சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் 77 வது ஆண்டு விழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து உடன் விழா துவங்கிய இவ்விழாவில் வரவேற்பு நடனமாக காவடியாட்டம் ஆடப்பட்டது. ஆசிரியர் கண்ணதாசன் வரவேற்புரை ஆற்றினார். பள்ளியின் தலைமை ஆசிரியர் அழகப்பன் விழாவிற்கு தலைமையேற்று ஆண்டறிக்கையை வாசித்தார். இப்பள்ளியின் முன்னாள் மாணவி டாக்டர் மாதரசி சோழன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மாணவர்கள் வாழ்வில் சிறக்க என்னென்ன வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் எனவும், உடல் ஆரோக்கியத்தைப் பேண தேவையான ஆலோசனைகளையும் எடுத்துக் கூறினார். இப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஜேசுதாஸ் வாழ்த்துரை வழங்கினார்.

கடந்த கல்வியாண்டில் 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் பள்ளி அளவில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகள் அரவிந்த், சிவசங்கர், சுவேதா, நந்தினி, மகேஸ்வரி, பிரியங்கா, யோகேஸ்வரி, சுவேதா ஆகியோரைப் பாராட்டி ரொக்கப் பரிசுடன் சான்றிதழ் வழங்கப்பட்டது. மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் திறமையை நிரூபித்த மாணவர்கள் ரமேஷ், ராகவன், ராஜா மற்றும் மதிபாலன் ஆகியோருக்கு ரொக்கப்பரிசு வழங்கப்பட்டு பாராட்டப்பட்டனர். இந்தக் கல்வியாண்டின் மிகச்சிறந்த மாணவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் வெங்கடேஸ்வரன் மற்றும் யுவராஜ் ஆகியோருக்கு பரிசு வழங்கப்பட்டது. பள்ளி அளவில் இல்லம் வாரியாக நடைபெற்ற கபடி போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. இவ்விழாவினையொட்டி ஆசிரியர்களுக்கான அதிர்ஷ்டக் கட்டப் போட்டியும் நடைபெற்றது. சிலம்பம், கரகாட்டம், நாடகம் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றது. விழாவினை ஆசிரியர் பிரபு ஒருங்கிணைப்பு செய்தார். விழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகளை மோகன் ராசன், சந்தானகிருஷ்ணன், மாரிமுத்து, அண்ணாத்துரை, சேவியர் எழிலரசன், சுப்பிரமணியன் உள்ளிட்ட ஆசிரியர்கள் செய்தனர். திரளான மாணவ மாணவிகளும், பெற்றோர்களும் பார்வையாளர்களாக கலந்து கொண்டனர். ஆசிரியை உமாராணி நன்றி கூறினார். தேசிய கீதத்துடன் விழாவானது நிறைவு பெற்றது.

## சோழிங்கநல்லூர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இல்ல புதுமனை புகுவிழாவிற்கு அமைச்சர் வருகை

ஒட்டியம்பாக்கம் பிப்.2

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட, புனித தோமையார்மலை ஒன்றியம், ஒட்டியம்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர், ஊராட்சி மன்ற உறுப்பினருமான ஓ.கே. எஸ் சதீஷ் அவர்களின் இல்ல புதுமனை புகுவிழாவிற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுபிரமணியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ், புனித தோமையார் மலை ஒன்றிய கழகச் செயலாளர், கோவிலம்பாக்கம் ஜி. வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், சித்தாலப்பாக்கம். ஜே. இ. பாண்டியன், தலைமை பொதுக் குழு உறுப்பினர், ஒன்றிய கவுன்சிலரமான மேடவாக்கம், ப.ரவி, ஒன்றிய குழு தலைவர் சங்கீதா பாரதிராஜன், ஒன்றிய கவுன்சிலர் கல்பனா சுரேஷ் ,மாவட்ட துணைச் செயலாளர் பாலவாக்கம் மு. மனோகரன், தலைமை பொதுக்குழு





உறுப்பினர் அரிகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கா. வீ. தியாகராஜன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஜெ.டி.மனுநீதி, எச்.டி .போஸ், ஒன்றிய பொருளாளர் த.டில்லிபாபு, மாவட்ட பிரதிநிதிகள் கே.குமார், ஆர்.சொக்கலிங்கம், ஜி. எம்.ஏழுமலை, புனித தோமையார் மலை ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கே. சரவணன், இ.விஜய், என். புவனேஷ், சா.ராமதாஸ், ஆர்.வெங்கடேசன், ஆர். எஸ்.லோகேஸ்வரா உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

## சிவகங்கையில் வானவில் மன்ற கருத்தாளர்களுக்கான பயிற்சி



சிவகங்கை பிப்02

சிவகங்கை மாவட்டத்திலுள்ள அரசுப்பள்ளிகளில் வானவில் மன்றம் சிறப்பாக செயல்படுத்தும் வகையில் வானவில் மன்ற கருத்தாளர்களுக்கு சிவகங்கை ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அலுவலக கூட்டரங்கில் ஜனவரி மாத வேலை அறிக்கை சமர்பித்தல் மற்றும் மீளாய்வுக் கூட்டம் பிப்ரவரி மாதத்திற்கான அறிவியல் பரிசோதனைகளை விளக்கும் பயிற்சியும் நடைபெற்றது. சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலுமுத்து வழிகாட்டுதலின்படி மாவட்ட உதவித் திட்ட அலுவலர் பீட்டர் லெமாயு கூட்டத்தைத் துவக்கி வைத்து கருத்தாளர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்து ஆலோசனைகளை வழங்கினார். வானவில் மன்ற கருத்தாளர் ஜெயபிரியா வரவேற்றார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் பள்ளிக் கல்வியின் வானவில் மன்ற முதன்மைக் கருத்தாளர் ஆரோக்கியசாமி அறிவியல் செய்முறைகளுக்கான நுணுக்கங்களைக் கூறி வாழ்த்தி பேசினார். அமைப்புசார் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாலாவிடம் கருத்தாளர்களின் வேலை அறிக்கையின் நகல் சமர்ப்பிக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்ட வானவில் மன்ற கருத்தாளர்கள் வேணிசொர்ணதேவி பிரியங்கா அறிவியல் பரிசோதனைகளையும் சிவகங்கை மாவட்ட வானவில் மன்ற கருத்தாளர்கள் ஏங்கெல்ஸ் புஷ்பராணி கணித செயல்பாட்டையும் செய்துகாட்டி விளக்கினர். அறிவியல் சோதனைகளுக்கான உபகரணங்கள் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு பயிற்சியில் பயன்படுத்தப்பட்டன. கிராம அறிவியல் திருவிழாவினை நம் மாவட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு ஒன்றியத்தில் சிறப்பாக நடத்துவதற்கான ஆலோசனைகள் பெறப்பட்டன.

எதிர்காலத் திட்டம் மற்றும் வேலை அறிக்கை யின் தொகுப்பும் கருத்தாளர் களிடமிருந்து பெறப்பட்டன.

வானவில் மன்ற கருத்தாளர் பாண்டிசெல்வி நன்றி கூறினார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆசாத் மற்றும் வானவில் மன்ற கருத்தாளர்களும் பங்கேற்றனர்.



இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (31.01.2025) விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறையின் மூலம் பூச்சி நோய் விழிப்புணர்வு வழிகாட்டி கைகேட்டினை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு உள்ளார்.



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற மனிதநேய வார நிறைவு விழா நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், மனிதநேய வார விழாவினை முன்னிட்டு, பள்ளி மாணாக்கர்களிடையே நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணாக்கர்களுக்கு பாராட்டு கேடயங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி ரவிக்குமார் (மானாமதுரை), எஸ்.மாங்குடி (காரைக்குடி), மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கலை கதிரவன், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் (பொ) பொ.கார்த்திகேயன், மாவட்ட அளவிலான வன்கொடுமை தடுப்புக் கண்காணிப்புக்குழு, ஆதிதிராவிடர் நலக்குழு மற்றும் தூய்மைப்பணிபுரிவோர் மாவட்ட கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் க.பொன்னுச்சாமி, அ.பூமிநாதன், இரா.செல்வகுமார், த.பாலாஜி, ச.புலிக்குட்டி, ந.பிச்சை, மலைச்சாமி உட்பட பலர் உள்ளனர்.



தேனி மாவட்டம் தேனி கனரா வங்கி ஊரக வேலைவாய்ப்பு பயிற்சி மையம் மற்றும் மத்திய அரசின் (குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்) வளர்ச்சி நிறுவனம். மதுரை, இணைந்து நடத்திய தொழில் முனைவோருக்கான அரசியல் திட்டங்கள் மானியங்கள் வங்கி கடன் உதவிகள் ஆதரவு திட்டங்கள் மற்றும் சுய வேலைவாய்ப்பு தேவைகள் குறித்த ஒரு நாள் விழிப்புணர்வு மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சி கனரா வங்கி ஊரக வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, தலைமையில் நடைபெற்றது



வேலூர் மாவட்டம், வேலூர் மாங்காய் மண்டி அருகே நடைபெற்று வரும் வேலூர் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் அரசு பொருட்காட்சியில் இடம்பெற்றுள்ள பொழுதுபோக்கு அம்சங்கள் மிகுந்த கவர்ச்சிகரமான பொலிவுடன் காணப்படும் காட்சி.

## யோகா மற்றும் கராத்தேவில் வேல்ஸ் குளோபல் பள்ளியை சேர்ந்த 107 மாணவர்கள் உலகசாதனை



தாம்பரம் பிப் 02

தற்காப்பு கலை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில்நூற்றுக்கும்மேற்பட்ட மாணவர்கள் யோகா மற்றும் கராத்தே செய்து உலகசாதனை படைத்தனர்.

மேடவாக்கத்தில் உள்ள வேல்ஸ் குளோபல் பள்ளியில் தற்காற்பு கலை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நோவா உலக சாதனை நிகழ்ச்சி இன்று நடைப்பெற்றது. அதன்படி 65 மாணவ, மாணவியர்கள் தொடர்ந்து 4 நிமிடத்தில் 100 விதமான யோகாசனங்களை செய்து அசத்தினர்.

அதபோல் 42 மாணவர்கள் கண்களை கட்டிகொண்டு தொட்15 நிமிடங்கள் கராத்தே கட்டா செய்து உலக சாதனை படைத்தனர்.

இதனை நோவா உலகசாதனையை புத்தக தலைமை எடிட்டர் ராஜ்குமார், இந்திய இயக்குனர் தீலிபன், மாநில நடுவர் இசக்கி ராஜ் ஆகியோர் பார்வையிட்டு உலகசாதனை அங்கீகரித்தனர். இதனையடுத்து உலகசாதனை படைத்த பள்ளி முதல்வர் கிறிஸ்டினா ஜூலிட் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு உலகசாதனைகான சான்றிதழ் மற்றும் கோப்பை வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

நிகழ்ச்சிகான ஏற்பாடுகளை யோகா மாஸ்டர் நவீன் குமார், காரத்தே மாஸ்டர் ஐயப்பன் மற்றும் வேல்ஸ் குளோபல் பள்ளி ஆசிரியர்கள் செய்திருந்தனர். சாதனை படைத்த மாணவர்களுக்கு பள்ளி நிர்வாகம் மற்றும் தலைமை ஆசிரியர் பாராட்டுகளை தெரிவித்தனர்.

## பழனி நெய்க்காரப்பட்டி ரேணுகாதேவி கல்வி குழுமத்தின் அறிவியல். உணவு கண்காட்சி



பழனி பிப்02

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகில் அமைந்துள்ள நெய்க்காரப்பட்டியில் ஷிஸிஞ் கல்விக் குழுமத்தின் அங்கங்களான ஸ்ரீ ரேணுகா தேவி தொடக்கப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிமெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆங்கில வழிகல்வி இணைந்துநடத்திய ஹிஞிகிகிழி25 கண்காட்சியில் விண்ணில் சீறிப்பாயும் ராக்கெட் நிகழ்ச்சி இஸ்ரோ சயின்டிஸ்ட் மூலம் நேரடியாக மாணவர்களுக்கு நிகழ்த்தி காட்டப்பட்டது, மேலும் 700 தோசை வகைகள், இயற்கை முறையில் நெல் உற்பத்தி செய்யும் முறை, கலப்படம் இல்லாத ஆரோக்கிய உணவு முறைகள், ஆள் இல்லாமல் இயங்கும் இருசக்கர நான்கு சக்கர வாகனங்கள், கழிவு நீரை தூய்மையாக்கி நன்னீராக்கும் முறைகள், இந்தியாவின் அனைத்து மாநில உணவு முறைகள், உடைகள், தொழில்கள் ஆகியவை பள்ளி குழந்தைகள் மூலம் மிக அழகாக பார்வையாளர்களுக்கு புரியும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக இஸ்ரோ வை சேர்ந்த சயின்டிஸ்ட் ஸ்ரீமதி கேசன், . ஆனந்தி, மாநில வணிகர் சங்க தலைவர் . விக்ரம் ராஜா, பழனி தாலுகா துணை கண்காணிப்பாளர் தனஞ் செயன், சேலம் ஆர் ஆர் . பிரியாணி உரிமையாளர் ஆர் ஆர் தமிழ்செல்வன், பழனி வணிகர் சங்க தலைவர் ஜேபி. சரவணன் கலந்துகொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர், இந்நிகழ்ச்சி ஏற்பாட்டினை எஸ் ஆர் டி கல்வி குழுமத்தின் தாளாளர்கள் . ரஞ்சிதம் ராமச்சந்திரன், ராஜ்மோகன், கிரிநாத், . பவிதா மற்றும் ஆசிரியர்கள், பள்ளி மாணவ மாணவிகள் பெற்றோர்கள் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்..

## காஞ்சி வடக்கு மாவட்ட திமுக மருத்துவர் அணி சார்பில் பெருங்களத்தூரில் இலவச மருத்துவ முகாம்

தாம்பரம் பிப்.2

காஞ்சிவடக்கு மாவட்ட திமுக மருத்துவர் அணி சார்பில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி 60வது வட்டத்தில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது

காஞ்சிவடக்கு மாவட்ட திமுக மருத்துவர் அணி சார்பில் மாவட்ட மருத்துவர் அணி தலைவர்

ஆர்எஸ்.கிருத்திகா தேவி அவர்களின் தலைமையில் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் கல்வியாளர் ஆதிமாறன் அவர்களின் முன்னிலையில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் இரா.தேவராஜ் வரவேற்பில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி 60வது வட்டத்தில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டி.பி.செந்தில்குமார், முன்னாள் மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பா.குறிஞ்சி சிவா, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் விக்கி(எ)விக்னேஸ்வரன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் இன்ஜினியர் மா.ராமமூர்த்தி, மாநகர சிறுபான்மை அணிநல உரிமை பிரிவு துணை அமைப்பாளர் ஏ.ரொனால்ட் ரொசாரியோ, பெருங்களத்தூர் தெற்கு பகுதி கழக இளைஞரணி துணை அமைப்பாளர் தா.மணிகண்டன், பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக இளைஞரணி துணை அமைப்பாளர் வே.கார்த்திக்ராஜ், தாம்பரம் மேற்கு பகுதிகழக இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பிரபா பாஸ்கர் ஆர்.உதயகுமார், வட்ட பிரதிநிதி குணசேகரன், வழக்கறிஞர்.அபிமெய்வாணன், ஜே.கருணாநிதி, எஸ்.ரிஸ்வான், கே.ராமு, வெல்டிங் சிவகுமார், எஸ்.பாலசுப்பிரமணியம், டி.மணிகண்டன், பா.முத்துராமலிங்கம் மேகநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்..





Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161